ARCHUNA

சிறுவர்களுக்கான மாத இதழ்

# அர்ச்சுனா

ஒக்டோபர் 2012

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு

14



பைதகரஸ்

வெட்டுக் கிளிகள்

சுயஸ் கால்வாய்

நடனக் கலைச் சான்றிதழ்
பெற்ற சகோதரர்கள்.

கண்டறியாதது
கறுப்பு நிறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHUNA

# சுத்தம் பேணுவோம்

**பிள்ளைகளே.....**

சுத்தம் சுகம் தரும் என்பதை மனதில் இருத்துங்கள். உங்களைச் சூழவுள்ள காற்றும், மரஞ் செடி கொடிகளும் நிலம் நீர் என்பனவும் உங்கள் உடலுக்கும் சுவாசத்திற்கும் சுகந்தரும் வகையில் அழுக்கற்றவைகளாக இருப்பதை நீங்களே நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். சுத்தமாக வைத்திருக்கும் உங்கள் சூழலும் உங்கள் பாவனைப் பொருட்களும் நீங்கள் சுகமாக வாழ உதவுகின்றன. நோய்கள் அணுகாமல் இருக்கவும். நுளம்பு, ஈ போன்ற நோய்களைப் பரப்பும் நுண் உயிர்கள் பெருகாமல் இருக்கவும் அவை உதவி செய்கின்றன. எனவே சுத்தத்தைப் பேணுங்கள் சுகமாக வாழுங்கள்.



-ஆசிரியர்-



# கடற்கரைக் காட்சி

கடல் வானம் போல நீலமாகக் காட்சியளிக்கும். பொங்கி வரும் பேரலைகள் கரையை மெதுவாகத் தழுவிச் செல்லும். அலையால் ஏற்பட்ட நுரைகள் கரையில் கற்கண்டு போலச் சிதறிக் காணப்படும். கடலில் கப்பல்கள் அலைகளுக்கேற்ப ஆடி ஆடி அசைந்து வரும். மீனவர்கள் வலை வீசி மீன் பிடிப்பார்கள். சிறுவர்கள் கடற்கரையில் பட்டம் விட்டு விளையாடி மகிழ்வார்கள்.



**ற.அசோக்**
தரம் - 5
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## பேச்சு

பேசுபவனைக் கவனிக்காதே, பேச்சைக் கவனி. பேச்சின் நீளம் அதன் மதிப்பைக் குறைத்து விடுகிறது.

- ஹஸரத் அலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயஸ் கால்வாய்



மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் கால்வாயாக சுயஸ் கால்வாய் அமைந்துள்ளது. இது 1859ஆம் ஆண்டு தொட்க்கம் 1869ஆம் ஆண்டுவரையான பத்து ஆண்டுகள் காலப் பகுதியில் வெட்டி முடிக்கப்பட்டது. இரண்டு கோடி பவுண்களை இக்கால்வாயை வெட்டுவதற்காகச் செலவு செய்துள்ளனர். இதன் ஆழம் 218 அடி, இதன் அகலம் 150அடி முதல் 300அடி வரை உள்ளது இதன் நீளம் 103 மைல்களாகும் இந்த கால்வாயைக் கப்பல்கள் கடந்து செல்ல 16மணி முதல் 17மணி வரையான நேரம் ஆகிறது,

இவ்வழியாகப் பயணம் செய்யும் கப்பல்கள் கால்வாயைப் பயன்படுத்துவதன் மூலம் சுருங்கிய பயண தூரத்தால் குறுகிய நேரத்தில் மிகவும் விரைவாகவே குறித்த இடத்தைச் சென்றடைகின்றன, கால்வாயைப் பயன்படுத்தும் கப்பல்களுக்கான ஆயத்தீர்வையால் வருடம் ஒன்றில் 30 இலட்சம் பவுண் கிடைக்கின்றது. இது கால்வாயின் பங்காளிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆங்கிலேயருக்கு அதிக பங்கு வழங்கப்பட்டது. இப்பொழுது சுயஸ் கால்வாய் எகிப்தின் வசம் உள்ளது. எகிப்திய ஜனாதிபதியாக இருந்த நாசர் (Nasser ) 1956ஆம் வருடம் ஜுலை மாதம் 26ஆம் திகதி கால்வாயைத் தேசிமயமாக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் விளையாட்டு - சுடோக்கு 2

பிள்ளைகளே ஒன்று தொடக்கம் ஆறு வரையான எண்களைக் கொண்டு சுடோக்கு விளையாட்டை விளையாடுவோம்.

ஒவ்வொன்றும் ஆறு சிறிய கட்டங்களைக் கொண்ட ஆறு பெரிய கட்டங்கள் உள்ளன. இதிலே மொத்தமாக 36 சிறிய கட்டங்கள் உள்ளன.

ஒவ்வொரு பெரிய கட்டங்களிலும் 1 தொடக்கம் 6 வரையான எண்களை மாத்திரம் இடவேண்டும்.

அதே வேளை ஒவ்வொரு நிரையிலும் அதே போன்று ஒவ்வொரு நிரலிலும் 1 தொடக்கம் 6 வரையான எண்களே இடப்படவேண்டும்.

பெரிய கட்டத்தினுள்ளேயும், நிரை ஒவ்வான்றிலும், நிரல் ஒவ்வொன்றிலும் 1 தொடக்கம் 6 வரையான எண்கள் ஒரு தடவை மாத்திரம் வருவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

கட்டங்களைச் சரியாகப் பூரணப்படுத்தி சுடோக்கு விண்ணப்பத் துடன் 31.10.2012ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

அதிஸ்டசாலிகளான மூவருக்குப் பரிசுப் பணம் வழங்கப்படும்.

ரூபா 500/- முதலாம் இடம்
ரூபா 300/- இரண்டாம் இடம்
ரூபா 200/- மூன்றாம் இடம்

மேலும் பத்து அதிஸ்டசாலிகளின் பெயர்கள், பாடசாலை விபரங்கள் என்பன வெளியிடப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 | | | | |
| | | 5 | 3 | | 1 |
| | | | | | |
| | 5 | | | 1 | |
| 6 | | | 5 | | 3 |
| | | 4 | | 2 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சுடோக்கு. விண்ணப்பம்.

முழுப் பெயர் :..............................................................
வகுப்பு :..............................................................
பாடசாலை :..............................................................
சொந்த முகவரி :..............................................................

நான் பூர்த்தி செய்த சுடோக்கு இலக்கம் 2ஐ இத்துடன் இணைத்துள்ளேன்.

..................................
கையொப்பம்.

## அர்ச்சுனா 13 .
## சுடோக்கு - 1 இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 4 | 1 | 2 |
| 2 | 4 | 1 | 3 | 6 | 5 |
| 5 | 1 | 3 | 6 | 2 | 4 |
| 4 | 6 | 2 | 1 | 5 | 3 |
| 1 | 2 | 4 | 5 | 3 | 6 |
| 6 | 3 | 5 | 2 | 4 | 1 |

## பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

1. செல்வன் கனகசபை தர்ஷன்,
தரம் - 8,
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

2. செல்வி ரக்ஷனி நாகரட்ணம்,
தரம் - 6,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

3. செல்வி அனுலா சிவகுமார்,
தரம் - 11,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பங்குகொண்டு பாராட்டுப் பெறுவோர்:**
செல்வன் ஜே.அபிஷன்,
தரம் - 7
யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

பரிசு பெறத் தகுதியுடையோர் பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் கூடிய உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்துச் சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாள்களில் உதயன் வெளியீட்டு அலுவலகத்தில் பரிசுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**- அர்ச்சுனா ஆசிரியர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புனிதரான ஜோன் பொஸ்கோ




அப்பொழுது அந்த வழியாக வந்த பண்ணையாளன் "இதெல்லாம் என்ன? இந்த வேலை நேரத்தில் இது எதற்கு?" என்று கேட்டான் "ஐயா வேலையின் மத்தியில் ஜெபிக்கும் போது கடவுள் எமது வேலையையும் எம்மையும் ஆசீர்வதிக்கிறார். விதைக்கும்போது ஜெபித்தால் விளைச்சல் இரண்டு மடங்காகும்" என்றார் ஜோன்.




ஜோனின் அண்ணன் கொஞ்ச காலத்தின் பின்னர் வீட்டை விட்டு வெளியேறியதால் தொல்லைகள் குறைந்தன. ஜோன் படிப்பில் கவனம் செலுத்தினார். உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். தையல் தொழிலையும் கற்றுக் கொண்டார். அதனால் கிடைத்த வருமானம் உணவுக்குப் போதுமானதாக இருந்தது.




ஜோன் ஞாபக சக்தி அதிகம் கொண்டவராக இருந்தார். ஒரு நாள் வகுப்புக்குப் புத்தகத்தைக் கொண்டு போகவில்லை. அன்று ஆசிரியர் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் ஞாபகத்திலிருந்து சரியான பதில்களைச் சொன்னார். ஆசிரியர் பாராட்டினார். ஒருநாள் அவரது பள்ளி மாணவர்களுள் ஒருவன் ஜோனைப் பணத் தேவைக்காகத் திருட்டில் ஈடுபடுமாறு தூண்டினான். ஆனால் அவரோ மறுத்துவிட்டார்.





ஒருநாள் ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை. மாணவர்கள் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தனர். அப்பொழுது ஒருவன் அமைதியாக அங்கே படித்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் லூயிஸ். அவனது செய்கை மாணவர் தலைவனான கனோலி என்பவனுக்கு ஆத்திரமூட்டியது. லூயிஸின் கன்னத்தில் பலமாக அறைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதற்கு லூயிஸ் உடனே “இப்பொழுது உனக்கு மகிழ்ச்சிதானே இதன்பின்னராவது என்னைப் படிக்கவிடு” எனச் சாந்தமாகக் கூறினான். அதனைப் பார்த்த ஜோன் லூயிஸைத் தனது நண்பனாகச் சேர்த்துக் கொண்டான். இருவருமே இறைபணி பற்றிப் பேசிக் கொள்வார்கள்.




நல்ல பையன்கள் பலரைச் சேர்த்து ஜோன் மகிழ்ச்சி தரும் சபை ஒன்றை உருவாக்கினார். அதில் ஜெபம், பாடல் என்பவற்றுடன் மகிழ்ச்சியான சுற்றுலாக்களையும் நடத்தினார். பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டதும் இருவருமே குருமடத்துக்குச் சென்று குருக்களாகப் பயிற்சி பெற விரும்பி மடத்தில் சேர்ந்து கொண்டனர்.




ஜோன், லூயிஸ் இருவருமே விண்ணகம் பற்றி அறிவதிலும் இறைபக்தியிலும் ஈடுபாடு கொண்டனர். அவை பற்றி ஏனையோருக்கும் தெரிவித்தனர். மரணம் வாழ்வின் முடிவல்ல அது நித்திய வாழ்வழிக்கும் மோட்சத்துக்கான வழி என அறிந்தனர். ஒருநாள் இருவருமே ஒரு திராட்சைத் தோட்டத்தின் நடுவாகப் போய்க் கொண்டிருந்தனர்.




அப்பொழுது ஜோன் “இந்தத் திராட்சைத் தோட்டத்தின் பழங்களைப் பார்க்கிலும் இனிமையான பழங்களும் இரசமும் விண்ணகத் தந்தையிடத்தில் உள்ளன நான் விரைவில் அதைப் பெறுவேன்” என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி மாவட்டம்



| | | |
|---|---|---|
| மொத்தப்பரப்பு | - 1652 சதுர கிலோ மீற்றர் | |
| நிலப்பரப்பு | - 1617 சதுர கிலோ மீற்றர் | |
| நீர்நிலைகள் | - 35 சதுர கிலோ மீற்றர் | |
| பிரதேச செயலாளர் பிரிவுகள் | - 18 | |
| | ஹிக்கடுவ, | பெத்தேகம, |
| | அக்மீமன, | ஹபறாதுவ, |
| | அம்பலாங்கொட, | நேகொட, |
| | பலப்பிட்டியல்பிட்டிய, | பெந்தோட்டை, |
| | காலி நாற்புறச்சுழல், | இமதுவ, |
| | போப்பே, | போத்தல, |
| | யக்கமுல்ல, | கரந்தெனிய, |
| | தவளம, | நியாகம, |
| | நெலுவ, | வெலிவிற்றிய |
| சனத்தொகை | - 1030000 | |
| ஆண்கள் | - 499000 | |
| பெண்கள் | - 53100 | |
| 10 வயதிற்கு மேற்பட்டோர் | - 913714 (2004இல்) | |

இனரீதியான சனத்தொகைப் பரம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | - சிங்களவர் - 94.4% |
| | இலங்கைத் தமிழர் -1.1% |
| | இந்திய வம்சாவழித் தமிழர் - 0.9% |
| | முஸ்லிம்கள் - 3.5% |
| தொழிலாளர் அணி | - 422845 (46.3%) |
| தொழிலாளர் அணி பங்கீடு | - விவசாயம் - 31.2% |
| | கைத்தொழில்26% |
| சேவைகள் | - 42.8% |
| வறிய மக்கள் | - 26% |
| வறிய குடியிருப்புகள் | - 21.7% |

**வளங்களும் வாய்ப்புகளும்**

கரையோர மற்றும் நன்னீர் மீன்பிடி, விவசாயம், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பாற்பண்ணைத் தொழில், சிறுவியாபாரம், உற்பத்தி முயற்சிகள், விவசாயப் பொருள் பதனிடல், தும்புக் கைத்தொழில், சுற்றுலாத்தொழில் என்பனவே காலி மாவட்டத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாகும்.


நெல், றபர் தென்னை என்பன இங்கு செய்கை பண்ணப்படும் பிரதான பயிர்களாகும். ஏற்றுமதிக்காகச் செய்கைபண்ணப்படும் பயிர்களுள் பழங்களும், காய்கறிகளும் அடங்குகின்றன. சனத்தொகை அதிகரிப்பதாலும் நகரங்கள் விரிவடைவதாலும் பயிர்ச் செய்கைக்கான காணிகள் குறைந்து வருகின்றன. உள்நாட்டு நீர்நிலைகளில் நண்டு, இறால் என்பன பிடிக்கப்படுகின்றன. கரையோர மீன்பிடி பாரம்பரிய முறையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆழ்கடலில் சூரன், அறக்குளா போன்ற மீன்வகைகள் பிடிக்கப்படுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குரங்கும் பூனைகளும்



1. ஒரு வீட்டில் ஒருநாள் கறுப்புப் பூனை ஒரு அப்பத்தைப் பார்த்தது. அது அதை எடுப்பதற்குள் மற்றொரு வெள்ளைப் பூனை ஓடிச் சென்று அதைக் கவ்விக் கொண்டது. "அந்த அப்பத்தை என்னிடம் கொடு; நான்தான் முதலில் பார்த்தேன்" என்றது கறுப்புப் பூனை.



2. "நான் தான் அதைக் கவ்வி எடுத்தேன். ஆகவே அது எனக்குத் தான் சொந்தம்" என்று வெள்ளைப் பூனை சொல்லியது. இரண்டும் அப்பத்திற் காகச் சண்டையிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3. அவ்வழியே அப்போது வந்த குரங்கினிடம் இரண்டு பூனைகளும் முறையிட்டன. "இதைச் சமமாக எங்கள் இருவருக்கும் பங்கிட்டுக் கொடு" என்று கேட்டுக் கொண்டன.



4. குரங்கு ஒரு தராசை எடுத்து வந்து இரண்டு அப்பத் துண்டுகளை தனித்தனியே தட்டுக்களில் வைத்தது. அப்பத் துண்டுகளைச் சமப்படுத்த அடிக்கடி அவற்றைக் கடித்துத் தின்றது. கடைசியில் இரு சிறு துண்டுகளே மீதி இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5. "பங்கிட்டது போதும். மீதி இருக்கும் சிறிய துண்டுகளையாவது எங்களிடம் கொடு'' என்று பூனைகள் கேட்டன. "ஒருமுறை நியாயத்தை தேடி நீங்கள் என்னிடம் வந்துவிட்டதால், நியாயம் வழங்காமல், நான் விடமாட்டேன். நியாயம் என்பது அவ்வளவு சுலபமானதல்ல! இப்பொழுது மீதமுள்ளவை என் வேலைக்குக் கூலி'' என்று சொல்லி அனைத்தையும் உண்டது.



6. பூனைகள் தமது ஒற்றுமை யின்மையை எண்ணி ஏமாந்து வருத்தத்துடன் போயின.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பறவைகள்



இலங்கை - காட்டுக் கோழி





இந்தியா - ஆண்மயில்

ஜேர்மனி - வெள்ளைக் கொக்கு




கனடா - வாத்து.



அமெரிக்கா - கழுகு



வட அமெரிக்கா - வான்கோழி



பர்மா - பெண்மயில்



தென் ஆபிரிக்கா - நீலக் கொக்கு



டென்மார்க் - வானம்பாடி




கொலம்பியா - பருந்து

- ம.வாகீஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாளினால் பூனை ஒன்றை உருவாக்குவோம்



01




02







03




04




05




06





07




08




09




10




11




12



13




14





15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16




17




18




19




20




21




22




23



24



25





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமான தாத்தா



தாத்தா நல்ல தாத்தா
தங்கமான தாத்தா
தாத்தா முகம் பார்த்தா
கட்டிக் கொஞ்சும் தாத்தா
நரை விழுந்த தாத்தா
நறுக்கு மீசைத் தாத்தா
விரும்பும் இனிப்பு எல்லாம்
வேண்டித் தரும் தாத்தா
சிரிக்க வைக்கும் தாத்தா
சிணுங்க வைக்கும் தாத்தா
குறும்பு நாங்கள் செய்தால்
முறைத்துப் பார்க்கும் தாத்தா
தாத்தா போல யாரு
யாருமில்லைப் பாரு
தாத்தா சொல்லைக் கேளு
நல்ல படி வாழு

**எஸ். தேனாள்**
**மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.**

**அட்டையில் :**

நடனக்கலையில் சான்றிதழ் பெற்ற
சகோதரர்கள்
சிவகுமார் சத்தியலோஜினி தம்பதியினரின்
மகன்களான

**செல்வன் சி.அநபாயன்**

தரம் 4,
செவின்ந் அட்வேஞ்சர்ஸ் சர்வதேச பாடசாலை,
வவுனியா.

**செல்வன் சி.பராந்தகன்.**

தரம் 2,
வ/இறம்பைக்குளம் மகாவித்தியாலயம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைதகரஸ்



**தோற்றம் 580 - 572 கிமு**
**மறைவு 500 - 490 கிமு**

பைதகரஸ் சாமோஸ், கிரேக்கத்தில் பிறந்தவர் ஆனால் இது பற்றிய விபரங்கள் நிச்சயிக்கப்படாமலே உள்ளன அவர் எதனையும் எண்களின் மூலமாகவே விபரிக்க முயன்றார் அதனால் எண்கள் மீதான நம்பிக்கை அவரிடம் நிறையவே இருந்தது இவரை எண்களின் தந்தை என்றே பலரும் போற்றினர். அத்துடன் இவர் ஒரு தத்துவ மேதையாகவும் திகழ்ந்தார் கேத்திர கணிதத்தில் இவர் கண்டு விளக்கிய தேற்றம் பைதகரஸின் தேற்றம் (Pythagoras theorem)என அழைக்கப்படுகிறது.

# எங்கள் கல்லூரி



சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி
சித்தம் மகிழும் எங்கள் கல்லூரி வாழ்க
வாழ்க வாழ்கவே
வையம் போற்ற வாழ்கவே
சைவம் தமிழும் புகழும் ஓங்கும்
மன்னார் இந்துக் கல்லூரி - இந்த
வையம் முழுதும் வாழும் தமிழர்
வாழ்த்திப் போற்றும் கல்லூரி
பக்தியோடு புத்தி புகட்டி
படிக்க வைக்கும் கல்லூரி - எம்மைச்
சக்தியுள்ள மனிதராக்கிச் சாதனை
நாட்டும் கல்லூரி
தும்பிக் கையான் நிழலில் பூத்த
தூய இந்துக் கல்லூரி -
தன்நம்பிக்கையை நெஞ்சில் ஊட்டி
நல்வழி காட்டும் கல்லூரி
நல்ல நல்ல வாழ்வை நெய்யும்
சான்றோர் போற்றும் கல்லூரி - அறிவில்
வல்ல வல்ல மனிதர் விளையும்
வயலாய் விளங்கும் கல்லூரி

**எஸ். தேனாள்**
**மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற் படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்,**

**அர்ச்சுனா சிறுவர் வட்டம்,**

**36, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**



ARCHUNA

# அர்ச்சுனா

## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ..............................................................

..............................................................

வகுப்பு : ..............................................................

பிறந்த திகதி : ..............................................................

பாடசாலையின் பெயர் : ..............................................................

..............................................................

வீட்டு முகவரி : ..............................................................

..............................................................

.............................................. ..............................................

மாணவர் கையொப்பம் அதிபர் கையொப்பம்

## அர்ச்சுனா சிறுவர் வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள், ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா

ARCHUNA

## சிறுவர் வட்டம்

அங்கத்துவ இலக்கம் – 34



அ. கனியமுதன்
4 +
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை
யாழ்ப்பாணம்.

அங்கத்துவ இலக்கம் – 35



பா. கேசவரஜனி
தரம்– 08
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
நெடுந்தீவு.



**யா/கொக்குவில் மனோன்மணி முன்பள்ளிச் சிறுவர்களின் உடற்பயிற்சி நிகழ்ச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணம்

**07**




மிதிலைக்குச் செல்லும் வழியில் அழகிய ஓர் ஆச்சிரமத்தை ராமன் கண்டான். அங்கு ஒருவரும் காணப்படவில்லை. விஸ்வாமித்திரரை நோக்கி, ''சிறந்த முனிபுங்கவரே! இந்த ஆச்சிரமம் யாருக்குச் சொந்தமானது? கவனிப்பார் இல்லாததுபோல ஏன் பாழடைந்து காணப்படுகிறது? இங்கு யாரும் வசிக்கவில்லையா? என்று ராமன் வினவினான்.

''இந்த ஆச்சிரமம் சபிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் இது பாழடைந்து காணப்படுகிறது. தவத்தில் சிறந்த கௌதமமுனிவர் தன் அழகிய மனைவி அகலிகையுடன் இங்கு மகிழ்ச்சியாக வசித்து வந்தார்'' என்றார் விஸ்வாமித்திரர். ''அப்போது என்ன நடந்தது?'' என்று ராமனும் லக்ஷ்மணனும் ஆவலுடன் கேட்டனர்.

அவர்களுக்கு அகலிகையின் கதையைச் சொல்ல ஆரம்பித்தார் விஸ்வாமித்திரர். ''தேவர்களுக்கு அரசனான இந்திரன் ஒரு நாள் இவ்வழியே சென்று கொண்டிருந்தான். அகலிகையைக் கண்டான்; அவளை அடைய வேண்டுமென்று மிகவும் விரும்பினான். ஏதேனும் தந்திரம் செய்து கௌதமமுனிவரிடமிருந்து பிரித்து அகலிகையை அடையத் திட்டமிட்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒருநாள் காலை "அருகிலுள்ள நதிக்கரைக்குச் செல்கிறேன் திரும்பி வரச் சற்று நேரமாகும்; பத்திரமாக இரு" என்று மனைவியிடம் சொல்லிவிட்டுச் சென்றார் கௌதமமுனிவர்.

கௌதமமுனிவர் சற்று தூரம் செல்லும்வரை இந்திரன் காத்திருந்தான். பின்னர் கௌதமமுனிவர் போல் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு ஆச்சிரமத்திற்குள் சென்றான். வெளியே சென்ற கணவர் விரைவாக வந்துவிட்டாரே என்று அலிகை வியப்படைந்தாள். கணவன் உருவில் இருந்த இந்திரனைக் கணவன் என்றே நினைத்து உபசரித்தாள் அகலிகை.

உண்மையான கௌதமமுனிவர் திடீரென ஆச்சிரமத்திற்குத் திரும்பிவிட்டார். அகலிகை தன் உருவில் இருந்த இந்திரனுடன் இருப்பதைக் கண்டு மிகவும் கோபம் கொண்டார். "நீங்கள் இருவரும் பெரியபாவத்தைச் செய்துவிட்டீர்கள்; அதற்காக நான் உன்னைச் சபிக்கிறேன். அகலிகை நீ கல்லாக மாறுவாயாக! அயோத்தியைச் சேர்ந்த ராமச்சந்திரமூர்த்தி இந்த வழியாக வரும்போது அவன் பாதம்பட்டு உனக்கு சாபவிமோசனம் கிடைக்கும்" என்று கோபமாகக் கூறிவிட்டு கௌதமமுனிவர் தவம் செய்வதற்குச் சென்றுவிட்டார். உடனே கல்லாக மாறிய அகலிகை ராமனின் வருகைக்காகக் காத்திருக்கிறாள்.

"இதுதான் அகலிகை, கௌதமமுனிவரின் கதை. ராமா! உன்னால் மட்டுமேஅகலிகையை சாபத்திலிருந்து விடுதலை அளிக்க முடியும். அவளுக்கு சாபவிமோசனம் கொடு!" என்றார் விஸ்வாமித்திரர்.

ராமன் தன் பாதத்தை அந்தக் கல்லின் மீது மென்மையாக வைத்தான். என்ன ஆச்சரியம்! ராமனின் பாதம் பட்டவுடன் அந்தக் கல் ஓர் அழகிய பெண்ணாக மாறியது. பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதும் புனிதமடைந்த அகலிகை அவர்கள் முன்பு தோன்றினாள். அதே நேரத்தில் இமயமலைக்குத் தவம் செய்வதற்குச் சென்றிருந்த கௌதமமுனிவரும் அங்கு திரும்பி வந்தார்.

"அகலிகையே! ராமன். கால் பட்டவுடன் நீ புனிதமடைந்தாய். அதனால் நான் உன்னை மறுபடியும் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்" என்று கௌதமமுனிவர் கூறினார்.

அகலிகைக்கு உதவியதற்காக ராமன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மற்ற முனிவர்கள் மற்றும் தன் சிஷ்யர்களோடு அயோத்தி அரசகுமாரர்களையும் அழைத்துக்கொண்டு விஸ்வாமித்திரர் மிதிலையை நோக்கி நடக்கலானார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *It is a cat*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு படத்திலுமுள்ள 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





# பலூன்

பலூன் ஒன்று வாங்கினேன்
பார்த்திருக்க ஊதினேன்
பலூன் ஊதி ஊதியே
பந்துபோல ஆனது

பந்தைப் போன்று வீங்கிய
பலூனைநூலால் கட்டினேன்
அந்தப் பந்தின் அழகிலே
ஆனந்தமாய் ஆடினேன்

ஓடி வந்து பாருங்கள்
உயரப்பலூன் போகுது
ஆடி ஆடிப் போகுது
அழகாய்ப்பறந்து போகுது

– செ.மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு தனது  சேர வழி
# இனத்த வருடன் காட்டுங்கள்









## சிந்திப்போம் செயலாற்றுவோம்

எப்பொழுதும் தோல்வி அடையாதது அன்பு ஒன்றுதான்.
ஆசையை விட்டுவிட்டால் எத்துன்பமும் எம்மைஅணுகாது.
தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவு நமக்குத் தேவை.
பொறுமைகொண்டு பெருமைஅடைந்தவர எவருமேஉலகில் இல்லை.
கோபத்தில் அளவுகடந்து செல்பவன் இறந்தவனுக்குச் சமனானவன் ஆவான்.
ஒருவனுக்கு அமுதமாக இருப்பது மற்றொருவனுக்கு நஞ்சாக இருக்கலாம் ஆகவே அனைவருக்கும் அனைத்தும் என்று எண்ணி விட வேண்டாம்.
ஒருவனின் பிறப்பைக் கேலி செய்பவன், படைத்த இறைவனையே கேலி செய்கிறன்.

தொகுப்பு - பா.ஆரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகச் சிவிங்கி



ஒட்டகச் சிவிங்கி பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். எல்லாப் பிராணிகளிலும் மிகவும் உயரமானது இதுதான். தன் கழுத்தை கம்பீரமாக நீட்டி இது நடப்பதே ஒரு தனி அழகுதான்.

இது ஒட்டகம் போல உயரமாகவும் சிவிங்கி போல உயரமாகவும் சிவிங்கி போல புள்ளிகள் உள்ளதாகவும் இருப்பதால் இரு மிருகங்களின் பெயர்களும் இணைந்து ஒட்டகச் சிவிங்கி என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவற்றின் கால்கள் சற்று வித்தியாசமானவை. பின்னங்கால் சோடிகளை விட முன்னங்கால் சோடிகள் உயரமானவை. இவை தம் நீண்ட கழுத்தின் உதவியால் உயரத்தில் உள்ள மர இலைகளையும் பற்றித் தின்கின்றன. நீண்ட நாட்களுக்கு நீரருந்தாமலும் இவை வாழ முடியும்.

ஒட்டகச் சிவிங்கி சாதுவாக யாருக்கும் தீங்கு செய்யாமல் இருக்கும். ஆனால் யாரும் பிடிக்க வந்தால் தன் பின்னங்கால்களால் அவர்களை எதிர்க்கும். இது சிங்கத்துடன் கூட போராடும் மனோபலம் உள்ளது. இது தனித்துக் காணப்படுவதில்லை. தன் கூட்டத்துடனேயே காணப்படும். ஒட்டகச் சிவிங்கிக்கு இந்தப் பெரிய கழுத்து இருந்தாலும் குரல் கிடையாது என்பதுதான் வியப்பான விடயம்.

தோலுக்காக இவை வேட்டையாடப்படுவதால் இவற்றின் தொகை குறைந்து வருகிறது. 'ஜிராபாகா மலோபார் டாவிஸ்' என்ற விஞ்ஞானப் பெயரை உடைய ஒட்டகச் சிவிங்கிகள் இப்போது ஆபிரிக்காவில் மட்டுமேகாணப்படுகின்றன.

இனி யாராவது 'ஒட்டகச் சிவிங்கி போல் வளர்ந்தது தான் மிச்சம்' என்று ஏசினால் கால்களால் உதைக்க வேண்டியதுதான்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுதையும் தொழிலாளியும்

ஒரு தொழிலாளி. தனது மகனையும் அழைத்துக் கொண்டு தனது கழுதையை விற்பதற்காகச் சந்தைக்குப் புறப்பட்டுச் சென்றான். சந்தைக்குச் செல்லும் பாதையில் அவர்கள் நடந்து சென்றார்கள்.


அப்பொழுது அந்தப் பாதையில் வந்து கொண்டிருந்த ஒரு வழிப்போக்கன் அவர்களைப் பார்த்து "ஏன் மூவருமே நடந்து செல்லுகிறீர்கள் நடந்து போகும் கழுதையின் மேல் சிறியவனான தம்பியாவது ஏறிப் பயணம் செய்யலாமே. ஒருவருடைய நடைக்களைப்புக் குறையும்தானே" என்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நானும் அதனை யோசித்தேன்' எனக் கூறியவன், சிறுவனைக் கழுதையில் ஏற்றிக்கொண்டான். சிறுவன் சிறிது தூரம் எந்தவித மன வருத்தமும் இன்றிக் கழுதையில் பயணம் செய்தான். தந்தையார் கூடியே நடந்து வந்து கொண்டிருந்தார். இவர்களை கண்ட வேறொரு வழிப்போக்கன் சிறுவனைப் பார்த்து "உனக்கு வெட்கம் இல்லையா? முதியவரான தந்தையை நடக்க விட்டு நீ கழுதையில் ஏறிச் சவாரி செய்கிறாயே. அவரைக் கழுதையில் ஏற்றிவிட்டு நீ நடந்து போ. அதுதான் நல்லது" என்றான். அதனைக் கேட்ட சிறுவன் கழுதையை விட்டிறங்கித் தனது தந்தையை கழுதையில் பயணம் செய்ய அனுதித்தான். தந்தையான தொழிலாளி கழுதையில் பயணம் செய்து சிறுதுதூரம் போன பின்னர் வேறொரு வழிப்போக்கன் அவர்களைப் பார்த்து "இந்தக் கழுதையில் நீங்கள் இருவருமே பயணம் செய்யலாமே. சிறுவனான மகனையும் ஏற்றிக் கொண்டு சந்தைக்குப் போகலாமே" என்றான். சிறுவன் சந்தோசமடைந்தான். தனது தந்தையுடன் அவனும் கழுதையின் மேல் ஏறிக் கொண்டான். இருவரையும் சுமக்க இயலாத கழுதை தள்ளாடித் தள்ளாடி நடந்தது. அதனைக் கண்ட ஒருவன் "ஐயோ உங்களுக்குப் புத்தி இல்லையா இந்தக் கழுதை பாவமல்லவா? அதனை நீங்கள் இருவருமே தூக்கிச் செல்வதுதான் இப்பொழுது நல்லது" என்றான். அவனது பேச்சைக் கேட்ட இருவரும் கழுதையைத் தூக்கிச் செல்லப் பொருத்தமான கம்பு ஒன்றை ஆயத்தம் செய்து அதில் கழுதையைத் தொங்க விட்டுத் தூக்கிச் சென்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுதைக்கோ அந்தச் செயல் வேதனையைக் கொடுத்தது. தனது உடம்பிலேற்பட்ட நோவைக் குறைக்க அங்குமிங்குமாக அசைந்து துடித்தது. அதனால் தூக்கி வந்த கம்பு உடைந்தது. கழுதை நிலத்திலே விழுந்தது எழுந்திருக்கவில்லை.



எல்லோரையும் திருப்திப்படுத்த எண்ணாமல் புத்திசாலித்தனமாக எதனைச் செய்யலாம் என நீங்களே சிந்தியுங்கள்.



# அஞ்சுகிறேன்


ஆண்டவனுக்கு நான் அஞ்சுகிறேன்.
ஆண்டவனுக்கு அடுத்தபடியாக
அவனுக்கு அஞ்சாதவனிடமே நான்
முக்கியமாக அஞ்சுகிறேன்.

- சா அதி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெட்டுக் கிளிகள்



ஒரு வெட்டுக்கிளி இருபது முதல் நாற்பது முட்டைகளை இடும். பெண் வெட்டுக்கிளிகள் பை போன்ற உறையினுள் முட்டைகளை இட்டு மணலினுள் அவற்றைப் புதைக்கின்றன. முட்டைகள் வெயிள் சூட்டினால் பொரிக்கின்றன. அவற்றுக்கு இறக்கைகள் இருப்பதில்லை. அவை தத்தித் தத்தி நடந்து சூழலிலுள்ள தாவரங்களை உண்ணுகின்றன. இவற்றின் தொகை அதிகரித்ததும் அவை தமது இடங்களில் போதிய உணவில்லாமையால் வேறு இடங்களுக்குக் கூட்டமாகப் பறந்து செல்லுகின்றன. வெட்டுக் கிளிகள் நேர்பாதையிலேயே பயணிக்கின்றன. அவை செல்லும் வழியிலுள்ள எல்லாப் பயிர்களையும் அழித்துச் செல்லுகின்றன.

அராபியர் வெட்டுக்கிளியை உண்பர். பரிசுத்த யோவான் வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் உண்டதாக வேதாகமம் கூறுகிறது. சில நாடுகளில் கோடிக் கணக்கான வெட்டுக்கிளிகள் கூட்டம் கூட்டமாகச் செல்லுகின்றன. 1889ஆம் ஆண்டு செங்கடலுக்கு ஊடாக 22000 சதுரமைல் இடத்தை வெட்டுக்கிளிகள் தமதாக்கிப் பயணித்துள்ளன. பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளிகளை அழிப்பதற் காகப் பலர் கடமையாற்றினர். 1881இல் சைபிரஸ் தீவில் 1300 தொன் எடையுள்ள முட்டைகள் மணலிலிருந்து எடுத்து அழிக்கப்பட்டன.



# குற்றம்

குற்றமே இல்லாத பொருளை நீ காண வேண்டுமென்று விரும்புகிறாயா? அது நடவாத செயல். அப்படி ஒன்று இதுவரை இருந்ததுமில்லை. இனி இருக்கப்போவதுமில்லை.

**- அலெக்சாண்டர் போப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்வத்துடன் செயற்படாதவனுடைய உள்ளத்தில்
மாபெரும் புதுமைகள் பிறப்பதில்லை!

— குஸ்டாவ் க்ராஸ்மேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டறியாதது கறுப்பு நிறம்

**கந்தையா -**
புறக்டரின் கோட்டை நீ பாரங்கே வடிவேலு
கறுப்பு நிறத்தோடு கலாதியாய் இருக்கிறது
மழைக்குளிரும் தாங்கும் மற்றுமுள ஊத்தைகளும்
முழிப்பாகத் தெரியாது முறையான கோட்டுத்தான்



**வடிவேலு**
புறக்டரின் கோட்டைவிடு பொதுவாகப் பாரண்ணே
கறுப்புக்கும் வெள்ளைக்கும் கன வித்தியாசங்கள்
இருப்பனவே அவற்றுடைய இயல்புகளில் சிலவற்றை
சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேட்டுக் கொள் கந்தையா

**கந்தையா -**
குடைச்சீலை கறுப்பு நிறம் கோயிற்குடை பட்டு
வெளிக்கிட்டுத் திரிகின்ற பரிகாரி நவசியரோ
கறுப்புக் குடைமீதே ஆறுமுழ வெள்ளைநிறச்
சால்வையையும் விரித்துத்தான் திரிகிறவர் கோடையிலே



**வடிவேலு -**
குடையிலே படும் வெயிலைக் கவனிக்கும் முன்பாக
வெயிலென்றால் என்ன அது என்பதனை நீயுணர்வாய்
ஊடகத்தின் உதவியோ ஒருசிறிதும் இல்லாது
வெற்றிடத்தால் வந்தடையும் சூடுபற்றி அறிவாயா?
மின்காந்த அலைவடிவில் வெப்பக் கதிர் பரந்து
எம்மை நோக்கிவரும் வெளியிலே சுள் என்று சுடுகிறது

**கந்தையா -**
வெற்றிடத்தை ஊடறுத்து வெய்யோன் ஒளிக் கற்றை
பற்றி எமைச் சுடும் வகையைக் கதிர்வீசல் என்றாயே



**வடிவேலு -**
வீசுகதிர் வெப்பமொரு பொருளிலே விழும்போதில்
ஒருபகுதி வெப்பத்தை உறிஞ்சிவிட மீதியெல்லாம்
வீசப்படும் எனினும் வீசுதலும் உறிஞ்சுதலும்
வெவ்வேறு நிறங்களுக்கு வெவ்வேறு அளவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கந்தையா -**

வெயில்வெக்கை பட்டகுடை கதிர்வீசுமேயானால்
குடைபிடிக்கும் ஆளுக்கும் வெக்கை
அடித்திடுந்தானே?

**வடிவேலு -**

மெத்தச் சரியண்ணே ஆனாலும் இன்னொன்று
கறுப்பு நிறத்தினுக்கோர் சிறப்புக் குணம்கேள் நீ
வெப்பத்தை விரைவாக உறிஞ்சும் அதே நேரத்தில்
வெப்பத்தை விரைவாக வீசிடவும் கூடும் அதால்
மிகக் குறைவாய் வெப்பத்தை உறிஞ்சுகிற
வெண்ணிறமோ வெப்பமிகத் தெறிப்பதற்கும்
முன்நிற்கும் அதனாலே வெயிலுக்கு ஏற்ற
உடை வெள்ளையுடை மாறாக நல்லுறிஞ்சிக் கறுத்த
உடை குளிருக்கு வலு இதமே



**கந்தையா -**

உட்புறத்தே கருநிறமும் வெளியாலே வெண்ணிறமும்
உள்ளகுடை தானேயோ உத்தமமாம் சொல் தம்பி

**வடிவேலு -**

அப்படியே ஆனாலும் குடையென்று நாங்களெல்லாம்
கொண்டு திரிபவையோ வெய்யிலுக்கும் மழைக்குமெனப்
பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு பொருளே ஆதலினால்
நீர் கசிந்து வாராத அனிலீன் கறுப்பு தன்னைப்
பூசுகிற ஒருவழக்கும் இருந்துவந்த காரணத்தால்
அழுக்கு வெளித் தெரியாத அரியதொரு குணத்தாலும்
கறுப்புநிறத் துணிகளினைக் குடைகளுக்குத்
தேர்ந்தெடுத்தார்

**கந்தையா -**

இவைகளுக்காய்த் தான் நவசர் வெக்கைதணி
விப்பதற்காய் வெள்ளை நிறச் சால்வையினை
வெளியாலே போட்டுள்ளார்



**வடிவேலு -**

கறுத்தநிறக் கரிச்சட்டி கடகடென சூடுறிஞ்சும்
பெருத்ததொரு தத்துவத்தைத் தன்னுள் அடக்கையிலே
இவற்றையெல்லாம் உணராத வெ·ரிப்பூச்சு
மங்கையரோ உடுப்புக்குத் தோதாக
நிறக்குடையும் வைத்திருப்பர்

**அமரர இ.சிவானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வர்ணம் தீட்டுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைந்து பழகுவோம்




# ஓநாய்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மழை

கொட்டும் மழை கொட்டட்டும்
குளங்கள் யாவும் நிறையட்டும்
கட்டுக்கட்டாய் நெல் விளைந்து
களத்தில் வந்து குவியட்டும்
உலகில் உள்ள உயிருக்கெல்லாம்
உணவுப் பொருள்கள் கிடைக்கட்டும்
உழைக்கும் மக்கள் எந்த நாளும்
உள்ளம் மகிழ்ந்து இருக்கட்டும்

ரா. பொன்னரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தாமே தப்பித்துக் கொள்ள..!

சுவர்ப்பல்லி எதிரிகளால் தாக்கப் பட்டால் உடனே தன்வாலைக் கத்தரித்துக் கொண்டு தப்பிச் சென்று விடும் பல்லியின் அறுந்தவால் சிறிது நேரம் துடித்துக்கொண்டிருக்கும். அதனைப் பார்த்து எதிரி குழம்பிப் போய் நிற்க, வாலறுந்த பல்லி ஓடித் தப்பித்து விடும். பல்லி வாலின் உறுதியற்ற எலும்புகள் அறுந்து விடுவதனால் தனியாகத் துண்டிக்கப்பட்ட துண்டு வால் துடிக்கின்றது. துண்டிக்கப்பட்ட இடத்தின் இரத்த குழாயினது சுற்றயற்றசைகள் சுருங்குவதால் இரத்தம் வெளியேறாது. அறுந்த வால் சில நாட்களின் பின்னர் வளர்ந்து விடுகிறது.

இவ்வாறே நண்டு தனது காலை கழற்றும் படியான சந்தர்ப்பங்களின்போது தற்காப்புக்காகக் காலை இழந்தாலும் அது மீண்டும் வளர்ந்துவிடுகிறது. இவ்வாறு தமது உறுப்புகளை இழக்கும் பிராணிகள் மீண்டும் அவற்றை விரைவாகவே வளரச் செய்யும் வலிமையைப் பெற்றிருத்தல் இயற்கையின் அதிசயமே.



எஸ்.மிலானி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மரதன் ஓட்டத்தின் வரலாறு

கிறிஸ்துவுக்கு முன் 430ஆம் ஆண்டு தாரியஸ் என்ற பேர்சிய அரசன் தனது இராணுவத்துடன் கிறீஸ் நாட்டைக் கைப் பற்றினான். இவர்களது யுத்தம் மரதன் என்ற இடத்தில் நடைபெற்றது. பேர்சிய இராணுவத்தில் 48000 வீரர்கள் இருந் தனர். கிறீசிடம் 12000 வீரர்கள் மாத்திரமே இருந்தனர். யுத்தத்தின் பின்னர் கிரேக்கப் படைகள் பேர்சிய படைகளை விரட்டியடித் தன. இந்நிலையில் பின்வாங்கிய பேர்சியா கிரேக்கத்தின் பெருநகரான எதென்ஸ் நகரத்தைத் தாக்கக் கூடும் என்ற அச்சத் தால் அந்தச் செய்தியை எதென்ஸ் நக ருக்கு அனுப்பும் எண்ணத்துடன் விரை வாக ஓடக்கூடிய ஒருவனாக, பிடிப்பிடியஸ் என்பவனைத் தேர்ந்து எடுத்தனர். அவ னிடம் தங்களின் வெற்றிச் செய்தியையும் எதென்ஸ் நகருக்கு எற்படக் கூடிய ஆபத் தையும் சொல்லி அனுப்பினர். அவன் மரதன் நகரிலிருந்து எதென்ஸ் வரையான 41.842 கிலோமீற்றர் தூரத்தையும் ஓடிச் சென்றடைந்தான். ஆனால் அவன் அங்கு மூச்சடைத்து மரணமானான். இந்த நிகழ்வை நினைவுட்டும் வகையில் 1896ஆம் ஆண்டு ஒலிம்பிக் ஓட்டப் போட்டிகளில் மரதன் ஓட்டமும் இணைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மயில்




இந்தியாவின் தேசிய பறவையான மயில் பறவைகளிலேயே அழகானது. ஆண் மயிலின் இறகுகள் ஒன்றன் மேல் ஒன்றாகச் சேர்ந்து சுமார் ஆறடி நீளத் துக்கு இருக்கும்.

மயிலின் சராசரி வயது 25 வருடங் கள் தான். அதற்குள் அது பல முறை இறகு களை உதிர்த்து விட்டு புதிய இறகுகளைப் பெறுகின்றது. மயிலின் இறகுகள் பொதுவாகக் கோடை காலத்தில் உதிர்ந்து குளிர்காலத் தில் வளர ஆரம்பிக்கும். ஒவ்வொரு மயிலிறகிலும் ஓவியர் வரைந்தது போன்ற அழகிய கண்கள் இருப் பதால் இதற்கு 'ஆயிரம் கண் பறவை' என்ற பெய ரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பயணம் கவனம்

வீதியில் போகின்ற பிள்ளைகளே
விரைகின்ற வண்டிகள் பார்த்திருங்கள்
மோதியதால் காயம் நேராமல்
முன்பின் கவனித்துச் சென்றிடுங்கள்
சைக்கிள் வருகுது முன்னிருந்து
சவாரி வருகிறார் ஆட்டோவில்
தயக்கம் இல்லாமலே மோட்டார்வண்டி
தாவிப் பறக்குது பின்னிருந்து
நடந்து வருகின்ற பிள்ளைகளே
நான்கு திசையையும் பார்த்திருங்கள்
கடந்து செல்லுமிடம் கண்டறிந்து
கவனத்துடன் பயணம் போய்வருவீர்.



■ உமாபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீறு, கடிக்காதே!

அந்தக் கிராமத்தில் சிறுவர்கள் சடுகுடு விளையாட்டு இடம். ஒரு சிறுவன் மாமரத்தில் ஏறி, பழங்களைப் பறித்துப் போட்டான். விழுந்தவற்றை மற்றவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஒருசில பழங்கள் சற்றுத் தொலைவில் விழுந்தன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீ கற்றவன்

நீ ஆயிரம் ஆயிரம் நல்ல நூல்களைக் கற்றாலும் கற்றபடி ஒழுகாதவரை, அந்நூல்களைக் கற்றதால் ஒரு பயனையும் பெற முடியாது.

- இமாம் கஸ்ஸாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GATEWAY CfiCT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY



- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady. 021 226 2395
- 1st Floor, New Market Buildind, Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road, Jaffna. 021 567 5555 / 021 222 7967

CfiCT | GATEWAY Language Centre | GATEWAY KIDS | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen | e-TYPE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. இல. 361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.